# 6.சமூகவியல் திறனாய்வு

அலகு -3

ப. ரமேஷ்

# உள்ளடக்கம்

- முன்னுரை
- சமூகவியல் திறனாய்வு
  - 1. சமுதாயப் பின்னணி (அ) களம்
  - 2. எதிர்கோள் (அ) ஏற்பு
  - 3. சமுதாயச் சித்திரிப்பு
  - 4. சமுதாய மதிப்புகள்
  - 5. சமுதாயச் சிக்கல்கள்
  - 6. சமுதாய மாற்றங்கள்

# சமூகவியல்  திறனாய்வு

- "சமுதாயத்தைச் சொல்லில் வடிவத்தளிப்பதே இலக்கியம்" – டி. போனால்ட் (De Bonald)
- (1)இலக்கியத்தின் உருவாக்கத்திலும் அதன் (2)பொருள் அமைவுகளிலும் மக்கள் மத்தியிலே அதன் (3) நடமாட்டத்திலும் சமுதாயத்திற்கு முக்கியமான இடமும் பங்கும் உண்டு  என்ற கருதுகோளின் அடிப்படையில் சமுதாயவியல் அணுகுமுறை அமைகிறது.

சமுதாயவியல் திறனாய்வு சமூகத்தை முதன்மைப்படுத்துவது

மார்க்சியம் – மார்க்சிய தத்துவத்தை முதன்மைப்படுத்துவது

சமூகத்திற்கும் இலக்கியத்திற்குமான உறவினை

# 1. சமுதாயப் பின்னணி (அ) களம்

- 1. படைப்பிற்குரிய காலப் பின்னணி
  - பாரதியார்
  - பாரதிதாசன்
  - கலைஞர் மு. கருணாநிதி
- 2. படைப்பாளனுடைய சமுதாயப் பின்புலம்
  - சாதி,
  - மதம்,
  - கல்வி,
  - வர்க்கம்

ஆனால்

“இலக்கியம் சமூகத்தை முழுக்க முழுக்க அப்படியே பிரதிபலிக்கிறது என்பது தவறு”

# 2. எதிர்கோள் (அ) ஏற்பு

- 1. உடனடியாக எதிர்கொள்ளல் – சூழல்
  - படைப்பாளி தன் விருப்பப்படி இலக்கியத்தைத் தேர்ந்தெடுக்கமுடியாது
- 2. போற்றலும் புரத்தலும் புறக்கணித்தலும்
  - பொருளாதார உறவு முதன்மையானது
  - வள்ளல் மன்னர்கள்
  - இடைக்காலத்தில் பக்தி
  - தற்போது – பதிப்பகங்கள் விளம்பரங்கள்

# 3. சமுதாயச் சித்திரிப்பு

- 1.மிகைப் படுத்துதல், 2.இயல்பு நவிற்சியாகச் சித்தரித்தல்,3.எள்ளல் விமரிசித்தல், 4. காரணகாரியங்களை கண்டு மாற்றங்கள் உரைத்தல்

- 1. சமுதாய நிறுவனங்கள்
  - திருமணம்,
  - தனிக்குடும்பம், - சிலப்பதிகாரம் முதல்
  - கூட்டுக்குடும்பம்
  - சாதி – சங்க காலத்தில் சாதி இல்லை
  - சமயம்
  - சட்டம்
  - அரசு
- 2. சமுதாய உறவுகள்
  - குடும்ப உறுப்பினர்கள்
  - வர்க்கங்கள்
  - ஏனைய பிரிவினர்கள்

- 3. சமுதாய நிலைப்பாடுகள்
  - கிராமிய வாழ்வு
  - நகர்ப்புறச் சித்திரிப்பு
  - குடிபெயர்வும் (புலம் பெயர்வு) அமர்வுகளும்
- 4. சமுதாயப் பிரிவுகளும் குழுக்களும்
  - குலங்கள்
  - சாதிகள்
  - ஊர்
  - வட்டாரம்
  - மொழி அடிப்படையில்
    - தேசிய, துணைத் தேசிய இனங்கள்
    - வர்க்கப்பிரிவினைகள்
- 5. பழக்க வழக்கங்கள்
  - நம்பிக்கைகள்,
  - சடங்குகள்,
  - பழக்கங்கள்

# 4. சமுதாய மதிப்புகள்

- 1. உடன்பாட்டு மதிப்புகள்
  - காதல் - சங்ககாலம்
  - கற்பு - தொல்காப்பியம்
  - தாய்மை
  - பாசம்
  - புகழ்
  - பக்தி
  - கொடை
- 2. எதிர்மறை மதிப்புகள்
  - பொய்மை, தீமை, பாவம், குடிப்பழக்கம், இலஞ்சம், பித்தலாட்டம்
- 3. மதிப்பு மாற்றங்கள்
  - தேக்கங்கள், சீரழிவுகள்

# 5. சமுதாயச் சிக்கல்கள்

- சமுதாய நிறுவனங்கள்
- பிரிவுகள்
- உறவுகளிடையே முரண்பாடுகளும் சுய முரண்பாடும் –
  - மோதல்கள்,
  - விளைவுகள்
- அந்நியமாதல்,
  - வறுமை,
  - வேலையின்மை,
  - குடும்பச்சிதைவு,
  - அலுவல் மகளிர் பிரச்சனை,
  - பெண்ணடிமை - சாதியடிமை

# 6. சமுதாய மாற்றங்கள்

- மாற்றங்கள்
  - உறவுகள்,
  - நிறுவனங்கள் ,
  - மதிப்புகள்,
- காரணங்களும் விளைவுகளும்
- கருத்துநிலை மாற்றங்கள்

# 8. உளப்பகுப்பாய்வுத் திறனாய்வு

அலகு -3

ப. ரமேஷ்

# உள்ளடக்கம்

- முன்னுரை
- உளப்பகுப்பாய்வுத் திறனாய்வு
  - உளவியல் அணுகுமுறையும் மனப் பகுப்புகளும்
  - படைப்பு வழிமுறை –
  - கனவும்  கவிதையும் –
  - ஒத்துணர்வு –
  - வாழ்க்கை வரலாற்றுத் திறனாய்வு –
  - ஒடிபஸ் மனச் சிக்கல் –
  - யுங்-ம் உளவியல் திறனாய்வும்  -
  - லக்கானும் உளவியல் திறனாய்வும் –
  - சொல்லும் உத்தியும்
  - நனவோடை உத்தி
  - தமிழில் உளவியல் அணுகுமுறை

# முன்னுரை

- மனித மனத்தின் செயல் கூறுகளைப் புரிந்து கொள்வதற்குச் செக்மண்ட் ஃபிராய்டு என்பார் வளர்த்தெடுத்த ஒரு துறைதான் உளப்பகுப்பாய்வுத் துறை
- மனம் குறித்த பல்வேறு கருத்தாக்கங்களை முன்வைத்து இலக்கியத்தை அணுகித் திறானாய்கிற முறைதான் உளவியல் அணுகுமுறை
- “உளவியல், இலக்கயிம் ஆகியவற்றின் கூட்டினால் உளவியல் திறனாய்வு, தொன்மைத் திறனாய்வு ஆகிய இரண்டு திறனாய்வு அணுகுமுறைகள் தோற்றம் பெற்றன. – ப. மருதநாயம்.

# உளவியல் அணுகுமுறையும் மனப் பகுப்புகளும்

- ஃபிராய்ட்
- மனித மனம்
  - உறைந்த பனித்தீவு – பெரும்பகுதி கண்ணுக்குப் புலப்படாத ஒரு தளத்தில் மூடுண்டு கிடக்கிறது
  - சிறுபகுதியே வெளியே தெரிகிறது-அறிமனம் (Consious)
  - மூடுண்ட பகுதிதான் நனவிலி மனம் (அ ஆழ்மனம் (அ) அடிமனம் (Unconscious)
  - நனவிலி மனம் தான் உண்மையில் மனிதர்களை இயக்கிக்கொண்டிருக்கிறது.

  - பல்வேறு சமூகக் காரணங்களால் வெளியிடத் தயங்கி, ஒடுக்கப்பட்ட அல்லது நசுக்கப்பட்ட ஆசைகள், தீர்க்க முடியாத முரண்கள், கலங்கடித்த இறந்தகால நினைவுகள் முதலியவை எல்லாம் சேர்ந்துதான் இந்த நனவிலி மனத்தை உருவாக்குகின்றன.

- “நினைவுகளில் இருந்து அழித்து விட்டோம் என்று நம்முடைய அறிமனம் மூலமாகச் சொல்லிக் கொள்பவையெல்லாம் நமக்குத் தெரியாமலேயே நம்முடைய நனவிலி மனத்தில் போய் தங்கிக் கொள்கின்றன. தங்கிக் கொள்வது மட்டுமல்ல. நம்மை இயக்குகின்ற நமது புரிதலுக்குள் அகப்படாத ஆற்றலாகவும் வினைபுரிகிறது”
- மடைமாற்றம் – அறிமனத்தில் ஒடுக்கப்பட்ட ஆசை குறிப்பாகக் காமஉணர்வு நனவிலி மனத்தில் கிடந்து, குறிப்பிட்ட சூழலில் தன்னை வேறு ஓர் உயர்ந்த பாவனையோடு வெளிப்படுத்திக் கொள்ளும். மததொண்டர், தியாகம், உள்ளிட்டவை
- மனசாட்சி சமூகம் கட்டமைத்த மதிப்பீடுகளை சுமந்து கொண்டு அதன் சார்பாக பேசுவதுதான் மனசாட்சி

# பிராய்ட் சிந்தனைகள்
# 2.பாலியல் உணர்வுகள் -

- இளம் குழந்தைப் பாலுணர்வு
- முதல் ஐந்தாண்டுக் காலத்திற்குள் பல படிநிலைகளைக் கடந்து விடுகிறது.
- ஒவ்வொரு படிநிலையிலும் உடலின் வெவ்வேறு பகுதியில் பாலுணர்வு மையம் கொள்கிறது.
  - வாய் – தாய்ப்பால் –தடை- புகைப்பழக்கம்
  - மலவாய் ( The anal)
  - பாலுறுப்பு (the Genital)
  - இவ்விறுப்புகள் மூலம் பாலியல் இன்பம் துய்ப்பதற்குத் தடையேதும் ஏற்பட்டால் அதன் ஆளுமையில் குறை ஏற்படும்

# பிராய்ட் சிந்தனைகள்
# 3. நனவிலி மனம்- வெளிப்படும் ஒடுக்கப்பட்ட ஆசைகள்

- 1. தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் செயல்பாட்டிற்கு ஏற்பத் தன்னுடைய ஆசைகளையே மறுதலித்துரைக்கும் போக்கு (Defence Mechanism)
- 2. வாய் தவறிப்போதல்(Slips of the tongue), அறியாமல் எழுதி விடுதல்(Slips of the Pen), நோக்கமற்ற செயல்பாடுகள் (Uninteded Action), கனவுகள் (Dreams)

# மனித ஆளுமை மூன்று தளங்கள் - பிராய்ட்

- 1. இட் – (ID)
- 2. ஈகோ (Ego)
- 3. சூப்பர் ஈகோ ( Super - Ego)
- இட் – (ID) - என்பது விழைவு உந்தல்களைச் சார்ந்த்து
- ஈகோ (Ego) தனிமனித நடத்தையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு வெளி உலகோடு தொடர்பு கொள்வது
- சூப்பர் ஈகோ ( Super - Ego) தான் வளரும் சமுதாயப் பண்பாட்டினைக் கணக்கில் கொண்டு வளர்கின்ற பகுதியாகும்.

- இட் – (ID)
  - முழுமையும் நனவிலி மனம் சாரந்த ஓர் அபாயகரமான சக்தி
  - காரண காரிய ஒழுங்கின்றி செயல்படும் ஆற்றலுக்கெல்லாம் மூலமான லிபிடோ என்பதன் சேமிப்புக் கிடங்காக இயங்கும்
  - தீயில் காய்கின்ற கொப்பரை, ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ளும் ஒரே நோக்கத்துடன் மூர்க்கத்தனமாகச் செயல்படும் உந்துதல்
  - முழுக்க இன்ப நெறியால் இயக்கப்படுகிறது.
- ஈகோ – (Ego)
  - மூர்க்கத்தனமான இட்டிலிருந்து மனிதனைக் காக்கும் கார்த்தா
  - அக உலகிற்கும் புற உலகிற்கும் இடைத்தரகனாக ஈகோ வினைபுரிகிறது.

- சூப்பர் ஈகோ ( Super - Ego)
  - சமுதாயத்தைக் காக்கும் தலையாய நோக்கோடு செயல்படும் இன்னொரு மனநிலைதான் சூப்பா ஈகோ.
  - நல்ல செயல் என்று எண்ணினால் பாராட்டும் தீயதென்று கருதியவற்றுக்குத் தண்டனையும் தரும்
  - பெற்றோர்களின் செல்வாக்கே சூப்பர் ஈகோ வளர்தவதற்குக் காரணம்
  - குற்ற உணர்வு வடிவமைக்கக் காரணம் இது
  - இட் -இன்பநெறி
  - ஈகோ- யதார்த்த நெறி
  - சூப்பர் ஈகோ – நீதி நெறி

# படைப்பு வழிமுறை - கனவும் கவிதையும்

- படைப்பின் தோற்றம் அல்லது பிறப்பு குறித்த தேடலோடு தொடர்புடையதாகும்.
  - ஓர் இலக்கியப் படைப்பு எவ்வாறு உருவாகிறது?
  - ஒரு மனிதனை இலக்கியப் படைப்பாளியாக மாற்றதுவது எது?
- இக்கேள்விகளுக்கு பிராய்ட் தரும் பதில் திருப்தித் தரக்கூடியவையாக இருந்தன.
- படைப்பாக்க எழுத்தாளர்களும் பகல் கனவுகளும் என்ற கட்டுரையில் பிராய்ட் விளக்கியுள்ளார். அவை.

1. குழந்தைகளின் விளையாட்டு உலகம், சமூக அமைப்பின் காரணமாகப் பெரியவர்களாக வளரவளரக் காணாமல் போகிறது. கற்பனை ஊற்றின் முதல் பயிற்சிக் களமாக அமையும் குழந்தைகளின் இந்த விளையாட்டு உலகம் காணாமல் போகத் தொடங்கியவுடன் அந்த இடத்தை நிரப்பப் பகல் கனவுகள் பிறக்கத் தொடங்குகின்றன. எழுத்தாளர்களின் எழுத்துக்கு ஆதாரமாக இருப்பவை மேற்கண்டவாறு தோன்றிய பகல் கனவுகள்தான் என்கிறார் ஃபிராய்டு. யதார்த்த உலகில் இருந்து பிரிந்து இந்தப் புனைவுலகத்தைப் படைப்பதற்கு எழுத்தாளர்கள் மிகப்பெரிய உணர்ச்சிகளை முதலீடு செய்கிறார்கள் என்கிறார்.

2. பகல் கனவு போலவே ஆசைகளை ஒடுக்குவதன் விளைவாகத்தான் தூக்கத்தில் கனவுகள் பிறக்கின்றன. சமூகக் கட்டுமானம் காரணமாக வெளியே சொல்ல முடியாத ஆசைகளை (Wishes) மனத்திற்குள்ளேயே அமுக்க முயலும் போது அவை நனவிலி மனதிற்குள் போய்ப் பதுங்கிக்

கொள்கின்றன. இவ்வாறு நனவிலி மனதிற்குள் போய்ச் சேர்ந்தவைகள்தான் சிதைந்த வடிவங்களில் தூக்கத்தில் கனவு வடிவில் வெளிப்படுத்திக் கொள்கின்றன. இத்தகைய அமுக்கப்பட்ட ஆசைகளின் மடைமாற்றம்தான் இலக்கியம் என்கிறார் ஃபிராய்டு.

3. நிகழ்காலத்தில் நடக்கின்ற அழுத்தமான அனுபவம் ஒன்று எழுத்தாளரின் பழங்கால நினைவுலகத்தைத் தட்டி விழிப்படைய வைக்கிறது. (அந்த நினைவு பெரும்பாலும் சமூகத்தால் தடை செய்யப்பட்ட குழந்தைப் பருவத்தைச் சார்ந்ததாக இருக்கும்) அந்தத் தடுக்கப்பட்ட ஆசையானது இப்பொழுது படைப்பாக்க எழுத்து மூலம் தனது ஆசையை நிறைவேற்றிக் கொள்கிறது. எனவே ஓர் இலக்கியப் படைப்பு என்பது விழிப்படைவதற்குத் தூண்டிய நிகழ்கால நிகழ்ச்சியையும் விழிப்படைந்த பழைய நிலையையும் ஒரே நேரத்தில் தன்னுள் கொண்டுள்ளதாகும்.

4. எழுத்தாளர் தனது பகல் கனவுகளில் வரும் வீறார்ந்த கதைமாந்தர்களை மற்றவர்களும் விரும்பிப் படிக்குமாறுச் செய்வதற்கு அவர் கையாளும் தொழில்நுட்பத் தந்திரம் என்ன? என்று நீங்கள் கேட்டால் ஃபிராய்டு அதற்கும் பதில் சொல்கிறார். அதாவது பகல் கனவில் வரும் அந்தக் கதைமாந்தர்களை அப்படியே படைக்காமல் நிகழ்காலத்திற்கு ஏற்பத் திருத்தி உருமாற்றிக் கொள்ளுகின்றனர் படைப்பாளிகள். மேலும் வாசகர்களுக்கு அழகியல் இன்பம் என்ற சலுகையினை வழங்கித் தனது காரியத்தையும் சாதித்துக் கொள்கிறார்கள். இந்த அழகியல் இன்பம் மூலமாகத்தான் அவர்களுடைய பகல் கனவுகளை நம்முடைய பகல் கனவுகளாக மாற்றி நாமும் அவமானமோ, வெட்கமோ இல்லாமல் அவற்றை அனுபவிக்கும்படிச் செய்துவிடுகிறார்கள். இவ்வாறு படைப்பின் கனவுகளோடும் பகல் கனவுகளோடும் ஒடுக்கப்பட்ட ஆசைகளால் உருவான நனவிலி மனச் செயல்பாட்டோடும் அவர் விளக்கியது இலக்கியம் குறித்த சொல்லாடலில் பெரிதும் ஆர்வம் தரத்தக்கதாக அமைந்தது.

# ஒத்துணர்வு

- Empathy - பிறருடைய மன உணர்ச்சியோடு நம்முடைய மன உணர்ச்சியும் ஒத்துக் போகும் நிலை
- மனிதர்களின் உணர்ச்சிகள் அவர்களின் பொதுவான மொழி அமைப்பினால் வடிவம் பெறுகின்றன.
- குறிப்பிட்ட சூழ்நிலைகளில் குறிப்பிட்ட நிகழ்வுகளை எதிர்கொள்கிற மனித மனங்கள் பெரும்பாலும் ஒரே வகையான ஒத்த உணர்வினை அனுபவமாக அடைகின்றன.
- இது மரபாகவும் மாறுகின்றன.

- ஒத்த உணர்வுகள் மனிதர்களின் அனுபவ உலகில் பெரும் பங்கு வகிக்கின்றன.
- மனிதர்களிடையே அனுபவமாக இருக்கும் இத்தகைய மரபார்ந்த ஒத்த உணர்வுகள்தான் இலக்கியத்தைப் படைக்கவும் படைத்ததை வாசிக்கவும் வாசித்ததைத் திறனாய்வு செய்யவும் திறனாய்வு செய்ததை இலக்கியக் கொள்கைகளாக வகுக்கவும் வழி ஏற்படுத்திக் கொடுக்கின்றன.
- ஒத்துணர்வு கொள்ளும் மன அமைப்பு இயங்காவிட்டால் இலக்கியச் செயல்பாடுகளுக்கு சாத்தியமில்லை

# ஒத்துணர்வு - இருவகை

- அறவியல் ஒத்துணர்வு
- அழகியல் ஒத்துணர்வு
  - அறவியல் ஒத்துணர்வுக்கு அடிப்படை சமூகம் கட்டமைத்துள்ள சில மதிப்பீடுகள்
  - இந்த மதிப்பீடுகளின் அடிப்படையில் நாம் பிறருடன் ஒத்துணர்விற்கு உள்ளாகி செயல் களத்திலும் வினைபுரிகிறோம்.
  - எ.கா. தொழிலாளர்கள் – ஒன்று கூடுதல் – போராடுதல்
  - இலக்கியம்- வாசிப்பு – இலக்கியப் படைப்பாக்கம் மனித வாழ்க்கையின் கூறாக மாறுகிறது.

- அழகியல் ஒத்துணர்வு
  - இலக்கிய ஆக்கத்திற்கு அடிப்படை போலச் செய்தல் என்கிற உந்துதலைப் படைப்பாளியும் வாசகரும் ஒரு சேர உள்ளத்தல் பெறுகின்ற மனப்பாங்கினைக் கொண்டிருப்பதனால் ஏற்படுகின்ற ஒத்துணர்வு
  - இந்த ஒத்துணர்வின் அடிப்படை போலச் செய்தலில் இருக்கிறது.
  - போலச் செய்தல் குழந்தை மனத்தின் அல்லது ஆதி மனத்தின் நீட்சியாக வெளிப்படுவதால் அது அழகியலாக அமைந்து இன்பம் அளிக்கிறது.
  - உளவியல் திறனாய்வு ஒத்துணர்வு குறித்து அதிகம் கவனம் கொள்கிறது.


# வாழ்க்கை வரலாற்றுத் திறனாய்வு – டெர்ரி ஈகிள்டன்

- 1. படைப்பாளியை மையமிட்ட திறனாய்வு
- 2. படைப்பின் உட்கூறுகளை மையமிட்ட திறனாய்வு
- 3. படைப்பின் புறவடிவம் குறித்த திறனாய்வு
- 4. வாசகரைக் குறித்த திறனாய்வு
- படைப்பாளின் வாழ்க்கை வரலாற்றிற்கும் அவரது படைப்பிற்கும் இடையே இருக்கம் நெருங்கிய உறவினைத் திறனாய்வு செய்வதற்கு வாழ்க்கை வரலாற்றுத் திறானய்வு பெரிதும் பயன்படுகிறது.
- இது மேலை நாடுகளில் உளவியல் திறனாய்வாக விளங்குகிறது.

# வாழ்க்கை வரலாற்றுத் திறனாய்வு = உளவியல் திறனாய்வு

- எழுத்தாளர்களின் வாழ்க்கை வரலாற்றைக் குழந்தைப் பருவத்திலிருந்து தொகுத்து அறிந்து கொண்டு அவை அவர் படைப்பில் வெளிப்படும் சொற்கள், கதைமாந்தர்கள், முரண், மொழிநடை, கதைப்பின்னல், முதலிய பலவற்றோடும் பொருத்திப் பார்த்து விளக்குவதற்கு இத்திறனாய்வு முயல்கிறது.
- எழுத்தாளர் மற்றவர்கள் போல் சாதாரணமானவர் அல்லர்
- அசாதாரணமான மனநிலை கொண்டவர்
- ஒரு குறிப்பிட்ட அளவு நரம்பியல் தொடர்பான நோய்களுக்கு ஆட்பட்டவர்
- எனவே எழுத்தாளராக விளங்குகிறார்.

- ஆல்பர்ட் மொர்டல் (albert mordell) – திறனாய்வாளர்- பிராய்ட் சம காலத்தவர்
  - “ படைப்பாளி தன்னுடைய படைப்பில் எப்போதும் தன்னை அறியாமல் மறைவாக இருக்கவே செய்கின்றார்”
  - வோர்ட்ஸ் வொர்த், கீட்ஸ், ஷெல்லி, பைரன் முதலிய ஆங்கில இலக்கியப் படைப்பாளிகளின் எழுத்துகளுக்கு அவர்களின் வாழ்க்கைப் பின்னணியும் தனித்தன்மைமிக்கப் பாலியல் தொடர்புகளும் தான் காரணம்





# எலெக்ட்ரா மனச்சிக்கல்



- ஜேன் ஆஸ்டினின் Jane Austen -
  - நான்கு புதினங்கள்
  - ஆய்வாளர் ஜியோ ஃபிரிகோரரர்
  - பெண்கள் –திருமணம் – மணமகன் – அம்மா ஏற்பாடு செய்த மணமகன்களை புறக்கணித்தல்
  - அப்பா ஏற்பாடு செய்த மணமகனைத் தேர்தெடுத்தல்
  - தந்தை மீதான மகளுக்குரிய பாலியல் வேட்கையைத்தான் ஃபிராட்டு எலெக்ட்ரா மன உணர்வு என்கிறார்.

- எட்மண்ட் வில்சன் – அமெரிக்கத் திறனாய்வாளர்
- சார்லஸ் டிக்கன்ஸ் – வாழ்க்கை – இளமைக்காலம் – பட்டறையில் வாழ்க்கை – கடினமான வேலை – அம்மாவின் மீது கோபம் - நாவல்களில் வெளிப்படுகிறது.



# தமிழில் வாழ்க்கை வரலாற்றுத் திறனாய்வு

- பாரதி – கனவு  என்ற கதைக் கவிதையில் தன் இளமைக்கால காதல் தோல்வி
- ஜெயகாந்தன் இளமைகால வறுமை – ஜெயகாந்தன் கதைகளில் ஓரத்து மக்களின் வாழ்வும் வலியும் – க. பஞ்சாங்கம்
- கி. இராஜநாராயணன் – விவசாய வாழ்க்கை
- மு.வ.  - படைப்புகளில் காணாமல் போகும் பாத்திரம் – முவ. காணாமல் போய் கண்டுபிடிக்கப்பட்டவர்

- இத்திறனாய்வை கவனமாக கையாளவேண்டும்.

# ஒடிபஸ் மனச் சிக்கல்

- ஃபிராய்ட் – நரம்பியல் மருத்துவர்
- ஆண் குழந்தை – ஐந்து வயதில் தனது பிறப்புறுப்பிற்கு முதலிடம் கொடுக்கும் நிலைக்கு வந்து விடுகிறது.
- தந்தையின் இடத்தில் தன்னை வைத்துக்கொண்டு தாய் மீது மோகமும் தந்தை மீது பகையும் கொள்கிறது.

- ஒடிபஸ் கிரேக்க நாடகத்தின் ஒரு பாத்திரம்
- ஒடிபஸ் சிக்கலை கொண்டு ஹெம்லெட் நாடகத்தை திறனாய்வாளர்கள் விளக்கினர்.
- ஹேம்லெட் –தந்தையைக் கொன்றவன் தன் சித்தாப்பா என அறிகிறான். சித்தப்பாவை கொல்ல தயங்குகிறான்.

- தமிழில் ஒடிபஸ் சிக்கல்
- அம்மா மாதிரியான மனைவி தேடும் விநாயகர்
- ஜெயகாந்தன் – ரிஷிமூலதம்
- தி. ஜானகிராமன் – அம்மா வந்தாள்

# மற்ற மனச் சிக்கல்கள்

- மகள் தந்தையை விரும்பும் – எலக்ட்ரா மனச்சிக்கல்
- தன்னைத்தானே விரும்பும் – நார்சிச மனச்சிக்கல்
- தன்னைத் துன்புறுத்திக் கொள்வதில் இன்பம் காணும் மசோக்கிச மனச்சிக்கல்
- பிற்றைத் துன்புறுத்தி இன்பம் காணும் சாடிச மனச்சிக்கல்
- இறப்பில் விருப்பம்
- கருப்பைக்குத் திரும்புவதில் விருப்பம் (Return of the Womb)

# யுங்-ம் உளவியல் திறனாய்வும்



- காரல் குஸ்தவ் யுங் (1875-1961)
- ஃபிராய்டுடன் பணியாற்றியவர்
  - குழந்தைப் பருவப் பாலுணர்ச்சி குறித்த பிராய்டு விளக்கத்தை மறுத்தார்.
  - நனவிலி மனத்திற்கு பாலியல் ஒடுக்குமுறைதான் காரணமென்பதையும் மறுத்தார்
  - 1. தனிமனித நனவிலி
    - கூட்டு நனவிலி
  - 2. மனித மனம் புறமுகத்தவை (Extrovert) அகமுகத்தவை (Introvert)

- ஃபிராய்டு “ நனவியில் அடங்கியுள்ளவற்றில் காணப்படும் முரண்பாடானவை குறித்தும் தெளிவான தன்மை குறித்தும் கவனம் கொள்ளவில்லை. மேலும் நனவிலிருந்து கிளம்புகின்ற ஒவ்வொன்றுக்கும் மேல், கீழ் என்றும் உள்ளும் புறமும் என்னும் பன்முகப்பட்ட தன்மை உண்டு என்பதையும் அறியாதவராக இருந்தார். – யுங்
- கூட்டு நனவிலி  நாடு, இடம், காலம் மொழி கடந்த அனைத்து மனிதர்களுக்கும் பொதுவானது. இந்த கூட்டுநனவிலி மனத்தில் இருந்து பிறப்பதனாலேதான்  உலகத்திற்கே பொதுவான தொன்மங்களும் தொல்படிவங்களும் தோற்றம் பெறுகின்றன.

# லக்கானும் உளவியல் திறனாய்வும்

- ழாக் லக்கான் 1901-1981 பிரெஞ்சு நாட்டுப் பின் அமைப்பியல் வாதி
- ஃப்ராய்டின் உளவியல் கோட்பாடுகளை மறுவாசிப்பு
- நனவிலி மனத்தின் செயல்பாடும் மொழியின் செயல்பாடும் பெரிய அளவில் ஒத்திருக்கிறது.
- நனவிலி மனத்தின் அமைப்பு மொழியின் அமைப்பு போன்றதுதான்
  - "நனவிலி மனம் ஒரு மொழியின் கட்டமைப்பைக் கொண்டது" ழாக் லக்கான்
  - மனித மனம் என்பது மொழியைத்தவிர வேறில்லை

- மொழியை அடிப்படையாகக்கொண்டது ழாக் லக்கானின் உளப்பகுப்பாய்வு
- நனவிலி மனம் – உயிர்ப்பான பகுதி – (kernel of our being)
- மொழிபோல் தர்க்கத்திற்கு உட்படாதது
- மொழி போலவே எழுத்தாளர்களும் அவர்கள் படைக்கிற கதைப்பாத்திரங்களும் முழுமையும் ஒழுங்கும் கொண்டவர்கள் அல்லர்
- எழுத்தில் உறைந்து கிடக்கும் மௌனங்களும் இடைவெளிகளும்தான் உண்மையில் உயிர்ப்பான பகுதிகள்.

# சொல்லும் உத்தியும்

- மனித மனம் சொற்களால் கட்டமைக்கப்பட்டது.
- இலக்கியத்தில் மனித மனதின் பல்வேறு கூறுகளைக் காணலாம்
- அமுக்கப்பட்ட உணர்வுகளால் ஆன நனவிலி மனத்தின் தன்மையினை இலக்கியம் வெளிப்படுத்துகிறது.
- இலக்கியத்தில் உள்ள சொற்களுக்கு பாலியல் அடிப்படையில் விளக்கம் தருகிறது
  - குளம், பூ, குகை, கிண்ணம் – பெண்ணுறுப்பு
  - கோபுரம், ஈட்டி, வாள், கத்தி, பாம்பு, மலைச்சிகரம் – ஆணுறுப்பு
  - நடனம், பறத்தல், குதிரையேற்றம் – பாலுறவு இன்பம்

- சங்க இலக்கிய உள்ளுறை உவமக் காட்சிகள் இந்தக் கோணத்தில் விளக்க வாய்ப்பு அதிகம்.
- நாக்குத் தவறிப் பேசும் பேச்சுக்கள் அமுக்கப்பட்ட  உணர்வின் வெளிப்பாடாகும்.
- சிலப்பதிகாரம் – நெடுஞ்செழியன் - "கொன்று அச்சிலம்பு கொணர்க" ஊடல் தீர்க்க வேண்டிய நிலை

# நனவோடை உத்தி

- மனத்தில் தறிகெட்டு ஓடும் எண்ண ஓட்டங்கள்
- மனதில் ஓடும் எண்ண அலைகள் தொடர்ச்சி அற்றவை
- காரண-காரியம் அற்றவை
- சமூகத் தடைகளை மீறப் பெருக்கெடுப்பவை
- நனவிலி மனத்திலிருந்து வருபவை
- உண்மைக்கு மிக நெருக்கமான தன்மை
- வாசகர்களின் வாசிப்பதற்கு ஆர்வம் தரக்கூடியவைமனத்தில் ஓடும் தங்கு தடையற்ற எண்ணங்களின் வழியாக எழுத்தாளர் தன் கதையை எடுத்துரைக்கும் தன்மை தான் நடைவோடை உத்தி
- படைப்பாளிகளின் எடுத்துரைப்பியல் உத்தி

- நனவோடை உத்தி -சங்க இலக்கியம் – முல்லைத் திணை- இருத்தலும் இருத்தல் நிமித்தமும்
- மத்தியதர வர்க்கத்தின் இலக்கிய வகையான நவீன நாவல் இலக்கியத்தில் பலரும் இந்த உத்தியைப் பயன்படுத்தினர்
  - சி.சு. செல்லப்பா, லா.ச.ரா., மௌனி,
  - வெர்ஜினியா உல்ஃப், ஜேம்ஸ் ஜாங்ஸ், ஃபிரான்சிஸ் காஃப்கா
  - சி.சு. செல்லப்பா - ஜீவனாம்சம் - இறந்தவிட்ட தன் கணவன் பற்றி முன்னும் பின்னுமாக -
  - ஒழுங்கின்ற அமைவது தான் நடைவோடை

- உளவியல் திறனாய்வு செல்வாக்குப் பெற்ற திறனாய்வு முறைகள்
  - மிகை யதார்த்தவியல் Surrealism
  - அமைப்பியல்
  - பின் அமைப்பியல்
  - சிதைவாக்கத் திறனாய்வு De-constuction
  - பெண்ணியத் திறனாய்வு
  - வாசகர் ஏற்புநிலைத் திறனாய்வு Readers Reception Criticism
  - தொன்மைத் திறனாய்வு (அ) தொல்படிவத் திறனாய்வு

# தமிழில் உளவியல் அணுகுமுறை

- ரெனிவெல்லாக் ஆஸ்டின் வாரன் – இலக்கியக் கொள்கை மொழிபெயர்ப்பு – எல் குளோறியா சுந்தரமதி இலக்கியமும் உளவியலும் கட்டுரை
- பேரா. வை. சச்தானந்தன் – ஒப்பிலக்கியம் (ஓர் அறிமுகம் ) இலக்கியமும் உளவியலும்
- இ. மறை மலை – இலக்கியமும் உளவியலும்
- அரங்க நலங்கிள்ளி –இலக்கியமும் உளப்பகுப்பாய்வும் (உளவியல் ஆய்வுக் கட்டுரைகள்), ஃப்ராய்டின் கலை இலக்கிய உளப்பகுப்பாய்வு
- பாண்டியன் – ஔவையாரின் கவிதைவரிகள்
- தி.சு. நடராாசன், அ.அ. மணவாளன். ப. மருதநாயகம். தமிழவன், தி.கு. ரவிச்சந்திரன்